**World ChristianFellowship**
www.wcflondon.com
wcflondon@gmail.com

# *கலாத்தியர் பாடம் 04*
# *உண்மையான மற்றும் தவறான மதம்*
# *True and False Religion*

*உலகில் ஏன் மதங்கள் உள்ளன?*
*பொருள்சார்வாதிகள்(Materialists), நாம் கண்ணால் பார்ப்பவை மட்டுமே உண்மை, நாம் காணாத உலகம் என்று ஒன்று இல்லை என்கின்றனர்.*
*ஆனாலும் உலகில் மதம் என்ற ஒன்று உள்ளது.*

*மதம் என்று ஒன்று ஏன் உள்ளது?*
*இது ஏன் உலக அளவில் பரவி உள்ளது?*
*இது ஏன் தனிப்பட்டது?*
*இது ஏன் எல்லா காலத்திலும், எல்லா இடங்களிலும், எல்லா கலாச்சாரங்களிலும், எல்லா சமுதாயங்களிலும், இது வரை வாழ்ந்த எல்லா இனத்தவரை சேர்ந்தவரிலும் கலந்து உள்ளது?*
*மதம் ஏன் பல தன்மைகளில் உள்ளது?*
*மதம் ஏன் எங்கும் பரவி உள்ளது?*
*ஏன் பல மதங்கள் இருக்கின்றன?*

*நாம் ஏற்கனவே கலாத்திய புஸ்தகத்தின் முதல் பாடத்தின் போது ஒரு மனிதன் எப்படி ஆண்டவரோடு சமாதானமாய் வாழ முடியும் என்று பார்த்தோம்?*

*இவை நீண்டகால கேள்விகள்.*

*மதவாதிகள் இதை ‘மனிதனுக்கும் இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்களுக்கும் உள்ள தொடர்பாக கருதுகின்றனர்’*

***Defenition: தங்கள் தெய்வங்களுடன் மக்களை இணைப்பது மதம்****.*

*அல்லது இது இயற்கை உலகத்தையும், காணாத உலகத்தையும் இணைக்கும் பாலமாக கருதப்படுகிறது.*

***ஏன் இது உலகளாவியது?***

*எல்லா மனுஷரும் தேவனால் உண்டாக்கப்பட்டனர், அவருடைய சாயலாகவே உண்டாக்கப்பட்டனர். நாம் அவருடைய சாயலால் உண்டாக்கப்பட்டதால் இயற்கையாகவே அந்த ஒரு இணைப்பை நாம் உணர முடியும்.*

*வேதம் சொல்லுகிறது எல்லா சமுதாயமும் தேவனை நோக்கியே உள்ளது.* ***தேவனால் நமக்குள் கொடுக்கப்பட்ட உந்துதல் ஆகும்****.*

***ரோமர் 1:19-20****, தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.* ***20.*** *எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப் பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானதுமுதற் கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை.*

*தேவனுடைய நியாயப்பிரமாணங்கள் அவர்களுடைய இருதயங்களில் எழுதப்பட்டுள்ளது.*

***ரோமர் 2:15,*** *அவர்களுடைய மனச்சாட்சியும் கூடச் சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும், நியாயப்பிரமாணத்திற்க்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள்.*

*எது சரி எது தவறு என்பது நமக்குத் தெரியும், அந்த அறிவு நம்மை சரி அல்லது குற்றம் என்று எடுத்து உரைக்கிறது.*

***ஏன் மதம்?***

*ஏன் மதம் என்றால், மனிதன் தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்டதால் இயற்கையாகவே ஏதோ ஒன்று அவனை தேவனிடமாக சேர்க்கிறது.*

*தேவனுடைய கட்டளைகள் அவனின் இருதயத்தில் எழுதி இருப்பதால், அதை மீறும் போது இயற்கையாகவே அவனுக்குள் ஒரு பயம் உண்டாகிறது அவனை உண்டாக்கிய தேவன் நியாயம் தீர்ப்பார் என்று.*
*அதனால் தான் நாம் மனிதனாக உள்ளோம்.*

***மதங்களில் ஏன் பல விதங்கள் உள்ளன?***
*உலகில் இரண்டு உண்மையான மதங்கள் மட்டுமே உள்ளன! ஒன்று தேவனை பின்பற்றும் உண்மையான மதம், இன்னொன்று சாத்தானால் ஏற்படுத்தப்பட்ட பலதரப்பட்ட மத பிரிவுகள்.*

***உண்மையான மதம்*** *என்பது தேவன் தமது வேதாகமத்தில் தன்னை வெளிப்படுத்தி இருப்பதை கூறுவதாகும். அது கூறுவது என்னவென்றால் மனுஷ குமாரனாகிய கர்த்தராகிய*

இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலமாய் கிருபையைக்கொண்டு இரட்சிக்கப்படுவீர்கள் என்பதாகும்.

**பொய்யான மதம்** என்பது இரட்சிப்பு மனிதனுடைய கிரியைகளினால், அவனுடைய சாதனைகளினால், மற்றும் அவன் அதற்காக ஏதோ ஒன்றை செய்யவேண்டும் என்று உரைக்கிறது. அதாவது

- ✓ அறநெறிகள் மூலமாய்,
- ✓ மத கோட்பாடுகள் மூலமாய்,
- ✓ சடங்குகள் மூலமாய்,
- ✓ சில விசேஷித்த விழாக்கள் மூலமாய்,
- ✓ சில குணாதிசயங்கள் மூலமாய்

தன் இரட்சிப்பு பெற முடியும் என்கிறது.

ஒரே தேவன், ஒரே இரட்சகர், ஒரே ஒரு சுவிசேஷம், ஒரே ஒரு இரட்சிப்பின் முறை மற்றும் பரலோகம் செல்ல ஒரே வழி தான் என்று சாத்தானுக்கு நன்றாக தெரியும்.

ஒரே ஒரு ஜீவனுள்ள தேவன் தான் உள்ளார் என்பதும் சாத்தானுக்கு நன்றாக தெரியும். அவர் திரியேக தேவன் என்பதும், அவர் பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியாக உள்ளார் என்பதும் அறிவான்.

நம்முடைய கர்த்தர் பூமியில் வாழும்போதும் சாத்தான் மற்றும் பிசாசுகளுக்கு தெரியும் அவர் யார் என்று, அதை அறிந்தே அவைகள் அதற்கு ஏற்றார் போல் அவரிடம் நடந்து கொண்டன.

ஆனால் அவன் மனித வரலாற்றையே கறைகொண்டவர்களாக மாற்றிவிட்டான். பாவம் நிறைந்த மனிதனின் இதயம் பலதரப்பட்ட மதங்களை

*ஏற்றுக்கொள்ளும் படி இந்த உலகத்தையே தன்னுடைய தந்திரத்தின் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டான்.*

***சாத்தான் பல பொய் மதங்களை ஏன் கொண்டு வந்தான்??***

*அவன் தேவனின் பிரதான எதிரி.*

*அவன் தேவனுக்கு எதிராக கலகம் செய்த போது தேவனின் சந்தியில் இருந்து மூன்றில் ஒரு பங்கு தேவதூதர்களோடு கீழே தள்ளப்பட்டான். அந்த பிசாசு கூட்டங்கள் ஒன்றாக இணைந்து மனிதர்கள் மீதான தேவனின் சித்தத்தை மற்றும் திட்டத்தை குலைக்க செயல்படுகின்றன.*

*தேவன் ஒருவரே, இந்த பிசாசு கூட்டங்கள் ஆயிரம் ஆயிரமாக உள்ளன எனவே அதனை விதமான மத பிரிவுகளை உண்டாகி உள்ளான்.*

*எனவே நாம் கீழ்கண்டவற்றை உறுதி படுத்திக்கொள்ளலாம்,*

- ✓ *உண்மையான மதம் என்பது இரட்சிப்பு கிருபை மற்றும் விசுவாசத்தின் மூலம் கிருபையினால் கிடைக்கிறது என்று கூறுகிறது.*
- ✓ *பொய்யான மதம் என்பது இரட்சிப்பு உங்கள் சுய கிரியை மூலமே கிடைக்கும் என்கிறது.*

- ➢ *உண்மையான மதம் இரட்சிப்பு தேவனால் மட்டுமே கிடைக்கும் என்கிறது*
- ➢ *பொய்யான மதம் இரட்சிப்பு தேவனுடைய கிரியை மற்றும் மனிதனின் கிரியை இரண்டும் இணைந்தது என்று கூறுகிறது.*

- *உண்மையான மதம் தெய்வீக வெற்றியை கொடுப்பதாகும்.*
- *பொய்யான மதம் மனிதனின் சாதனையை வெளிப்படுத்தும் சாத்தானின் கையில் உள்ள கருவி ஆகும்.*

## பொய்யான மதம் மற்றும் அதன் பாதைகள்.

***ஆதியாகமம் 1& 2***
*ஆறு நாட்களில் தேவன் உலகத்தை படைக்கிறார்.*

***ஆதியாகமம் 1:31**, அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது; சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று.*

*ஒரு மிகவும் சரியான, பாவமில்லாத மனிதனின் படைப்பு.*

*மனுஷனும் மனுஷியும் ஒன்றாக நிர்வாணமாக தான் இருந்தார்கள் அவர்களுக்கு வெட்கம் என்ற ஒன்றும், தான் நிர்வாணமாக இருப்பதையும் உணராமல் இருந்தார்கள்.*

***ஆதியாகமம் 2:25**, ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும், வெட்கப்படாதிருந் தார்கள்.*

*அவர்கள் வெட்கப்பட ஒன்றுமில்லை.*
*பாவம் என்ற ஒன்று இல்லை.*
*ஒரு பிழை இல்லாத உலகம், சரியான மனிதன் மற்றும் சரியான மனுஷி.*
*மதம் என்ற ஒன்று இல்லை.*

*தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே பாலம் தேவை படவில்லை.*
*தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே எந்த தடையும் இல்லை.*
*ஒடுக்கப்படவேண்டிய (alienation) அவசியம் இல்லை.*
*தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் பிரிவினை இல்லை.*
*ஆதாமும் ஏவாளும் தேவனோடு ஏதேன் தோட்டத்தில் நல்ல உறவோடு வாழ்ந்து கொண்டு இருந்தனர்.*
*தேவனோடு ஒப்புரவாக வேண்டிய வழியை தேட வேண்டிய அவசியம் இல்லை.*
*தேவனோடு எப்படி நல்மனசாட்சியோடு வாழ்வது என்ற புலம்பல் தேவை இல்லை.*

***ஆதியாகமம் 3***
*சாத்தான் ஏவாளிடம் சென்றான், அவள் ஆதாமிடம் சென்றாள், இருவரும் தேவனுக்கு கீழ்படியாமற்போனார்கள். மனிதகுலம் வீழ்ச்சி அடைந்தது அங்குதான். உலகில் பாவம் பிறந்தது. உடனே தேவனுக்கும் மனிதனுக்கும் ஒரு பிளவு அல்லது பிரிவு ஏற்பட்டது.*

***ஆதியாகமம் 3:7,*** *அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள்.*

*பாவம் என்ன செய்தது?*
*பாவம் தேவனையும் மனுஷனையும் பிரித்தது.*

- ✓ *நல்ல ஐக்கியத்திலிருந்து, ஒரு சம்மந்தமும் இல்லாதது போல்.*
- ✓ *நல்ல உறவிலிருந்து பிரித்தது.*

- தேவனுக்கும் மனுஷனுக்கு இடையில் தடை இருந்தது.
- தேவனோடு ஒப்புரவாக வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

*ஆதாமும் ஏவாளும் எப்படி அந்த பிரிவை சமாளித்தனர்?*
***ஆதியாகமம்** 3:7, அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள்.*

*இப்படி தான் பொய்யான மதம் பிறந்தது!*
*தன்னுடைய மானத்தை மறைக்க மனிதன் செய்த முதல் சுயமான காரியம் இது தான்!*
*இந்த அநீதியை சரி செய்ய மனிதன் தன்னை மறைத்து கொண்டான்.*

***அதனால் என்ன நடந்தது?***
***ஆதியாகமம்** 3:8, பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள்.*

*அவன் மறைந்து கொண்டான் ஏனென்றால் அவனால் தேவனை சந்திக்க முடியவில்லை.*

*இதையே தான் பொய்யான மதமும் செய்கிறது. மனிதன் தன்னுடைய பாவங்களை மறைக்க சுய வழிகளை தெரிந்து*

*கொள்கிறான், ஆனால் அது அவனின் குற்ற உணர்வை போக்க வில்லை, அதனால் தேவனிடமிருந்து விலகி இருக்கிறான்.*

*பொய்யான மதம் என்பது தேவனிடம் இருந்தும் அவர் சமூகத்தினின்றும் விலக்குவதாகும்.*
*இதனால் ஒரு பயனும் இல்லை!*

***ஆதியாகமம் 3:9-10**, அப்பொழுது தேவனாகிய **கர்த்தர்** ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார். **10.** அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப் பதினால் பயந்து, ஒளித்துக்கொண்டேன் என்றான்.*

*ஆண்டவருக்கு மனிதனுக்கும் இருந்த இனிய உறவு முடிந்தது. மனிதன் தேவனுக்கு பயப்படுகிறான் ஏனென்றால் அவனுக்குள் பாவத்தை குறித்த குற்ற உணர்வு வந்துவிட்டது. அவனுக்கு வெட்கம் உண்டானபடியால் அவனும் அவன் மனைவியும் தன்னை மறைத்துக்கொண்டனர். அவர்கள் தேவனுக்கு பயந்து ஒளிந்துக்கொண்டனர்.*

*அவர்கள் தேவனுக்கு கீழ்படியாமற் போனார்கள்!*
***ஆதியாகமம் 2:15-17**, தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டு வந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார். **16.** தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். **17.** ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.*

*வியத்தகு விதமாக தேவனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு மாறிவிட்டது, ஆதாமும் ஏவாளும் மட்டும் அல்ல ஒட்டுமொத்த மனிதகுலமும் தேவனை விட்டு பிரிந்தது.*

*இப்பொழுது மத கொள்கைகள் வந்து "சிலவற்றை விட்டு விடுங்கள், உங்களை மறைத்து கொள்ள இதையெல்லாம் செய்யுங்கள் என கூறுகிறது".*
*இதனால் எந்த பயனும் இல்லை.*
*தேவன் அவர்கள் பாவத்தை வெளிக்கொணர்ந்தார், அவர்களை சபித்தார்!*

- ✓ *தேவன் சபித்தார்,*
- ✓ *சர்பத்தை,*
- ✓ *மனுஷியை,*
- ✓ *மனுஷனை,*
- ✓ *பூமியையும் மற்றும்*
- ✓ *படைத்த முழு பிரபஞ்சத்தையும்.*

*தேவனின் சாபம் முடிவில்லா பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு பொருளின் மூலக்கூற்றையும் தொட்டது. அந்த சாபம் உடனடியாக உலகின் கடைசி சிரிஷ்டிப்பு வரை சென்றது. மனிதனோடு சேர்த்து எல்லாமே சபிக்கப்பட்டதாய் மாறிவிட்டது. மனிதன் தன்னை மறைத்து கொள்ள எடுக்கும் முயற்சிகள் வீணே.*

*மனிதன் தன்னை மறைத்து கொள்ள உதவும் மதங்கள் எழும்பின,*

- ➢ *அது அவனின் மானத்தை மறைக்கவில்லை,*
- ➢ *அது தேவனை விட்டு அவனை மறைக்க வில்லை மற்றும்*
- ➢ *தெய்வீக நியாயத்தீர்ப்பிலுருந்து அவர்களை விலக்கவில்லை.*

***ஆதியாகமம் 3:21,*** *தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார்.*

*உண்மையான மதத்தின் முதல் செயல்பாடு.*
*ஒரு பாவி தன்னை சரி செய்துகொள்ள அல்லது தன் மானத்தை மறைக்க வேண்டுமானால், அது தேவன் மூலமே நடக்க முடியும், அதுவும் மரணத்தின் மூலமே சரி செய்ய முடியும்.*

*படைப்பிற்கு பிறகு நடக்கும் முதல் மரணம் இதுவாகும், தேவனே அந்த கொலையாளி.*
*பரிணாம கோட்பாடு இங்கே உதவாது ஏனென்றால் அது மரணத்தை தொடர்ந்து தள்ளி போட்டுக்கொண்டே இருக்கும்.*

*கிறிஸ்தவனின் கொள்கைகள் வேதாகமத்தின் முதல் பக்கத்திலேயே எப்படி சித்தரிக்கப்பட்டுள்ளது என்று பார்ப்போம்.*

1. *ஆதாமும் ஏவாளும் தேவனால் எச்சரிக்கப்பட்டனர் அந்த கனியை புசிக்கும் நாளிலே சாகவே சாவீர்கள் என்று.*
2. *அவர்கள் தேவனுக்கு கீழ்படியாமற்போனார்கள்*
3. *உலகில் பாவம் பிறந்தது*
4. *அவர்கள் மேல் மரணம் வரும் என்று எச்சரிக்கப்பட்டதால் அவர்கள் தன்னை மறைத்துக்கொள்ள முற்பட்டனர்.*
5. *அவர்கள் மரணத்தை பார்த்தனர் அனால் அவர்களின் மரணத்தை அல்ல*
6. *அவர்களுக்காக அடிக்கப்பட்ட கபடம் இல்லாத தேவ ஆட்டுக்குட்டியின் மரணத்தை பார்த்தார்கள்.*
7. *அவர்கள் 930 வாழ்ந்தார்கள்*

8. *தங்களை மறைத்து கொள்கிற பொய்யான மதம் பிறந்தது*
9. *உண்மையான மதம் துவங்கியது*
10. *தேவனால் மட்டுமே மனிதன் தன்னை சரி செய்து கொள்ளும் காரியம் தர முடியும் மரணம் மூலமாய்.*

***இரு மதங்களின் முன்னேற்றம்:***
***உண்மையான மதம்:***

*உண்மையான மதம் மரணம் தேவை என்கிறது, அதாவது நமக்கு மாற்றாக ஒருவரின் மரணத்தை கேட்கிறது. இஸ்ரவேல் தேசத்தின் முழு சரித்திரத்தையும் ஆராய்ந்து பார்த்தால் பல ஆயிரக்கணக்கான மிருகங்கள் மனிதனின் பாவங்களுக்காய் பலி செலுத்தப்பட்டன. ஆனால் அவைகளால் பாவத்தை முழுமையாக போக்க முடியவில்லை. ஒரு பழுதற்ற தேவ ஆட்டுக்குட்டி அவர்களுக்காய் அடிக்கப்பட்டு பாவத்தை போக்க போகிறதை குறிக்கும் விதமாக அவைகள் பலி செலுத்தப்பட்டன.*

*மனிதனின் உள்ளான கதறலை நினைவு கொள்ளுங்கள் தேவனிடம் நான் எப்படி ஒப்புரவு ஆவது?*
*தேவனிடம் போக உள்ள ஒரே வழி ஒரு பழுதற்ற பலி தான்!*

***எபிரேயர் 9:22,*** *நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது.*

*பழுதற்ற பலி என்பது இயேசு கிறிஸ்துவே அல்லாமல் வேறு இல்லை!*

*உண்மையான மதம் சொல்லுகிறது பாவம் செய்தவர்கள் மரணத்தை ருசி பார்த்தே ஆகவேண்டும் என்று.*

*பலியை தேவன் பார்த்துக்கொள்வார், அதன் மூலம் நமக்கு பாவ மன்னிப்பு கிடைக்கும், அந்த பலியானது ஒன்றும் அறியாத ஒருவர் மேல் தன்னுடைய தண்டனையை செலுத்துவர். That's what the அது தான் சரியான பலி செலுத்தும் முறை.*
*உண்மையான மதம் என்பது தேவனை சார்ந்து வாழும் வாழ்க்கை முறை ஆகும்!*

***பொய்யான மதம்:***

*பொய்யான மதம் என்பது உங்களை சரி செய்து கொள்ள உங்களை மறைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லும்."*

*பொய்யான மதம் என்பது நாம் செய்யும் கிரியைகளை பொறுத்து அமையும்.*

*பொய்யான மதம் என்பது எந்த பெயரிலாவது, எந்த தலைப்பிலாவது, எந்த வகையிலாவது, எந்த மொழி அல்லது தன்மையிலாவது அவைகளின் நோக்கம் என்னவோ ஒன்று தான். தெய்வத்தை திருப்தி செய்ய நீங்கள் ஏதாவது வகையில் உங்களை மறைத்து கொள்ள வேண்டும் என்பதே."*

*தேவனோடு ஒப்பொருவு ஆகா நீங்கள் ஏதாவது செய்ய வேண்டும்.*
*பரிசுத்த தேவனோடு சமரச நிலையில் இருக்க கிரியைகள் இருக்க வேண்டும்.*

*இப்பொழுது அந்த இரண்டு மதங்களும் எப்படி முன்னேறின என்று காண்போம்!*

*ஆதாமும் ஏவாளும் இனைந்து இரண்டு மகன்கள் பிறக்கிறார்கள்!*

***ஆதியாகமம் 4:1-2***, *1. ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை அறிந்தான்; அவள் கர்ப்பவதியாகி, காயீனைப் பெற்று, கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன் என்றாள். 2. பின்பு அவனுடைய சகோதரனாகிய ஆபேலைப் பெற்றாள்; ஆபேல் ஆடுகளை மேய்க்கிறவனானான், காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனானான்.*

*இந்த முதல் குடும்பத்தை குறித்து சற்றே சிந்தியுங்கள். இந்த முதல் பெற்றோர்கள் தன்னுடைய பிள்ளைகளுக்கு என்னத்தை கற்றுக்கொடுத்து இருப்பார்கள்?*
*என்னோடு நீங்கள் சற்றே கற்பனை செய்யுங்கள், உலகில் இப்பொழுது இரண்டே பேர் தான் உள்ளனர்.*

*என்னதான் தான் பிள்ளைகளுக்கு சொல்லி கொடுக்க பல விஷயங்கள் இல்லையென்றாலும், அவர்கள் தேவனிடமிருந்து கற்றுக்கொண்ட ஒரு படத்தை கண்டிப்பாக சொல்லி கொடுத்துஇருப்பார்கள்.*

***பலி: Sacrifice***
*நாம் பாவம் நிறைந்தவர்கள்,*
*நாம் சபிக்கப்பட்டவர்கள்,*
*நம்முடைய கரங்களில் மரணம் இருக்கிறது.*
*தேவனுக்கு உங்களுடைய கரத்தின் கிரியையினால் எதையும் படைக்காதீர்கள்.*
*ஏதோ ஒன்று பலியாக, தியாகமாக கொடுத்தே ஆகவேண்டும்.*
*நாம் நம்மால் முடிந்த வரை நம்முடையவைகளை மறைக்க முயற்சித்தோம், ஆனால் அவை தோல்வி அடைந்ததால் தேவனுடன் ஒப்புரவு ஆக ஒரு பலி தேவைப்பட்டது.*

*ஆதியாகம புஸ்தகத்தை முதல் 3 அதிகாரங்களை பார்க்கும் போது நமக்கு தெரிகிறது, இந்த பலியிடுதலை தான் ஆதாமும் ஏவாளும் அவர்கள் பிள்ளைகளுக்கு கற்று கொடுத்து இருக்க வேண்டும் ஏனென்றால் அந்த பாடத்தை தான் அவர்கள் தேவனிடம் இருந்து கற்றுக்கொண்டனர்.*

*ஆனால் என நடந்தது கவனியுங்கள்?*
***ஆதியாகமம்** 4:3, சிலநாள் சென்றபின்பு, காயீன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தான்.*

*காயின் தான் அறுவடை செய்த கையின் கிரியைகளில் சிலவற்றை காணிக்கையாக கொண்டு வந்தான். இதையே தான் அவன் பெற்றோர்களும் முதலில் செய்தனர். அதையே இவனும் செய்து தேவனுக்கு முன்பாக தோற்று போனான்.*

*காயின் அவன் பெற்றோர்கள் செய்தது போலவே பாவத்தை தானே மறைக்க முற்பட்டு தேவனுக்கு முன்பாக வந்தான்.*

***ஆதியாகமம்** 4:4, ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவை களிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரித்தார்.*

*ஆபேல் அவன் மதையிலிருந்து நன்றாக கொழுத்தவைகளை காணிக்கையாக கொண்டுவந்தான்.*

*தேவன் ஆபேலின் காணிக்கையை அங்கீகரித்தார் ஏனென்றால் பாவ நிவாரணத்திற்கு மரணம் அவசியம். தூய்மையான இதயமாக இருந்தால் கபடற்ற பலியை தேவன் அங்கீகரிப்பர்.*

மதம் எவ்வாறு செயல் படுகிறது என்பதை இங்கு முதல் குடும்பத்திலிருந்தே நாம் காண முடியும்.

பொய்யான மதத்தை விளக்குவது போல் உள்ளது இங்கு காயின் செய்தது, அதாவது பூமியிலிருந்து விளைந்ததை தன் சுய பெலனால் கொண்டு வந்தது. தாவரங்கள் பொய்யான மதத்தை குறிக்கிறது மற்றும் மனிதனின் கிரியையை குறிக்கிறது. எப்படியெனில் மரணம் இல்லாமல், பாவ நிவாரணம் பெற முயற்சிப்பது.

உண்மையான மதம் என்பது ஒரு மிருகத்தின் மரணத்தின் மூலம் விளக்கப்படுகிறது, தேவனால் இது அங்கீகரிக்கப்படும் எப்படியெனில் பாவியின் மரணத்திற்கு பதிலாக விலங்குகளின் மரணம்.

- ✓ காயின் பொய்யான மதத்தின் முன்மாதிரி ஆவான்.
- ✓ ஆபேல் உண்மையான மதத்தின் முன்மாதிரி ஆவான்.

- ➢ காயின் தான் உழைப்பின் பலனை காணிக்கையாக கொடுத்தான்.
- ➢ ஆபேல் காணிக்கையாக ஆட்டை பலியாக கொடுத்தான்.

உங்கள் கிரியைகள் மூலமாய் நீங்கள் ஏதோ கொண்டு வர முற்படுவது பொய்யான மதம் போல் ஆகும்.

ஆபேல் மிருகத்தை காணிக்கையாக கொண்டு வந்தான், ஏனென்றால் அவனுக்கு தெரியும் தேவனுக்கு கொண்டு வர அவனிடத்தில் ஒன்றும் இல்லை என்று. அவனுக்கு இன்னொன்றும் தெரியும் தேவன் அவனின் மரணத்திற்கு பதிலாக அந்த மிருகத்தின் மரணத்தை ஏற்று கொள்வர் என்று.

*இரட்சிப்பு என்பது பழுதற்ற ஒன்றை பலியாக செலுத்துவதன் மூலமே மட்டுமே கிடைக்கும்.*

***தவறான மதம் உண்மை மதத்தை ஒடுக்குகிறது! எப்போதுமே!!***

***ஆதியாகமம் 4:5-8**, 5. காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கிகரிக்கவில்லை. அப்பொழுது காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி, அவன் முகநாடி வேறுபட்டது.6. அப்பொழுது கர்த்தர் காயீனை நோக்கி: உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி ஏன் வேறுபட்டது? 7. நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டுகொள்ளுவாய் என்றார்.8. காயீன் தன் சகோதரனாகிய ஆபேலோடே பேசினான்; அவர்கள் வயல் வெளியில் இருக்கும் சமயத்தில், காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி, அவனைக் கொலைசெய்தான்.*

*உண்மையான மதம் எப்போதும் பொய் மதத்தால் படுகொலை செய்யப்பட்டிருக்கிறது.*

*தேவனுடைய உண்மையான படுகொலைக்கு இட்டுச்செல்லும் பொய்யான மதம் எப்பொழுதும் இப்படி தான் இருக்கும். உலகில் அதிகமாக துன்புறுத்தப்பட்ட/ **துன்புறுத்தப்படும்** மதம் கிறிஸ்தவமே!*

- *காயீனின் வழியானது கிரியைகளால் நிறைந்தது அது விசுவாசத்தை விரோதிக்கிறது.*
- *ஆபேலின் வழியானது விசுவாச பாதை அது தேவனுக்கு கீழ்ப்படிகிறது.*

- ❖ *காயீனின் வழியானது தன்மேல் உள்ள தன்னம்பிக்கை ஆகும்.*
- ❖ *ஆபேலின் வழியானது மற்றவரை நம்புவது ஆகும்.*

- *காயீனின் வழிக்கு மரணம் தேவை இல்லை.*
- *ஆபேலின் வழிக்கு மரணம் தேவை.*

***ஆதியாகமம் அதிகாரங்கள் 6-8***
*நோவா ஆபேலின் வழி அதாவது, உண்மையான மதத்தை பின்பற்றினார். நோவா அவன் மகன்கள் மற்றும் மகள்கள் மொத்தமாக 8 பேர் மாத்திரமே இருந்தனர்.*

*இவர்களை தவிர உலகில் உள்ள மற்ற அனைவருமே காயீனின் வழியில் மூழ்கி இருந்தனர், அதன் விளைவாக அனைவருமே உலகளாவிய வெள்ள பெருக்கில் செத்து மடிந்தனர்.*

*வெள்ளம் வற்றி புது வாழ்வு துவங்கிய போதும், காயீனின் வழி அதாவது சாத்தானின் வழி உலகை ஆக்கிரமித்தது.*

***ஆதியாகமம் 11:1-4,*** *1. பூமியெங்கும் ஒரே பாஷையும், ஒரேவிதமான பேச்சும் இருந்தது.2. ஜனங்கள் கிழக்கேயிருந்து பிரயாணம்பண்ணுகையில், சிநெயார் தேசத்திலே சமபூமியைக்கண்டு, அங்கே குடியிருந்தார்கள்.3. அப்பொழுது அவர்கள்: நாம் செங்கல் அறுத்து, அதை நன்றாய்ச் சுடுவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்; கல்லுக்குப் பதிலாகச் செங்கல்லும், சாந்துக்குப் பதிலாக நிலக்கீலும் அவர்களுக்கு இருந்தது.4. பின்னும் அவர்கள்: நாம் பூமியின்மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு, நமக்கு ஒரு நகரத்தையும், வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு*

கோபுரத்தையும் கட்டி, நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்லிக்கொண்டார்கள்.’’

பாபேல் கோபுரம் காட்டும் போது மக்கள் காயீனின் வழியையே பின்பற்றினர். அவர்கள் கடவுளுக்கு கோபுரம் கட்டினர், அவர்கள் மேல் நியாயத்தீர்ப்பு வந்தது.

நீங்கள் இதே முறை தொடர்ந்து வருவதை வேதாகமத்தில் காணலாம்.
ஆபிரகாம்
யாக்கோபு
சவுல்
தாவீது
இஸ்ரவேல் தேசம்.

தேவன் மக்களை ஆபேலின் வழியை அதாவது விசுவாச மற்றும் தியாக பலியிடும் முறையை பின்பற்றும் படி அழைத்தார்.

என்னதான் உலகத்தில் பெரும்பான்மையானோர் அதை பின்பற்றினாலும், காயீனின் வழியும் தொடர்கிறது.

ஆபிரகாமின் மூலம் இஸ்ரவேல் தேசம் உருவாகும் போது ஆபேலின் வழி இருப்பதிலேயே மிகவும் சிறிய வழி முறையாகத்தான் சிதறி இருந்தது. அனால் யூத மதம் அல்லது யூத முறை என்ற பெயரில் உண்மையான மற்றும் பொய்யான மதம் இரண்டுமே இஸ்ரவேல் தேசத்தில் கலந்து இருந்தது.

பொய்யான மதம் வெறும் வெளியிலிருந்து மாத்திரம் வருவது அல்ல உள்ளிருந்தும் வரும். பொய்யான மதம் யூத

*முறை மற்றும் கிறிஸ்தவத்திலும் கலந்து இருப்பதை நாம் காண முடியும்!*

*சாத்தான் மிகவும் தந்திரமாக அந்தி கிறிஸ்து போல் செயல் படாமல் ஒரு கிறிஸ்தவனாகவே வேஷம் போட்டு கிரியை செய்கிறான்.*

*ஒவ்வொரு நாளிலும் பலி செலுத்தும் முறையை பின்பற்றும் தேசமான இஸ்ரேலைப் பார்ப்போம். அவர்கள் இதை தினமும் கடைபிடிப்பவர்களாக முக்கியமாக சிறப்பு விழா காலங்களில் கடைபிடிப்பதை வழக்கமாக கொண்டு இருந்தனர். அவர்கள் தேவனுக்காக கிரியை செய்வதிலேயே மிகவும் கவனம் செலுத்தினார்களே ஒழிய அவர்கள் இருதயம் தேவனுக்கு மிகவும் தூரமாக இருந்ததை கண்டுக்கொள்ளவில்லை.*

*தீர்க்கதரிசிகள் சுற்றி உள்ள தேசத்தையும் அதிலுள்ள பொய்யான மத வழிகளை மாத்திரம் கண்டித்து எச்சரிக்காமல் இஸ்ரவேல் தேசத்தில் கலந்து உள்ள போலியான விஷயங்களையும் எச்சரித்து கண்டித்தனர்.*

*தேவன் இதை தீர்க்கதரிசி ஆமோஸ் மூலம் தெளிவுப்படுத்துகிறார்,*
***ஆமோஸ் 5:21-24**, 21. உங்கள் பண்டிகைகளைப் பகைத்துவெறுக்கிறேன்; உங்கள் ஆசரிப்புநாட்களில் எனக்குப் பிரியமில்லை. 22. உங்கள் தகனபலிகளையும் போஜனபலிகளையும் எனக்குப் படைத்தாலும் நான் அங்கீகரிக்கமாட்டேன்; கொழுமையான உங்கள் மிருகங்களின் ஸ்தோத்திரபலிகளையும் நான் நோக்கிப் பார்க்கமாட்டேன்.23. உன் பாட்டுகளின் இரைச்சலை என்னைவிட்டு அகற்று; உன் வீணைகளின் ஓசையை நான்*

*கேட்கமாட்டேன்.24. நியாயம் தண்ணீரைப்போலவும், நீதி வற்றாத நதியைப்போலவும் புரண்டுவரக்கடவது.*

*தேவன் ஏசாயா தீர்க்கதரிசி மூலம் பேசினார், (ஏசாயா 5ம் அதிகாரத்தில் பல முறை பார்க்கலாம்)*

*தேவனுக்கு பலி செலுத்துவது நன்மையான காரியம் என்றல் அதை சரியான முழு இருதயத்தோடு செலுத்துவதே அவசியம்.*
*எப்படி?*

*நான் ஒரு பாவி என்பது எனக்கு தெரியும்.*
*எனக்கு இரட்சிப்பை நானே சம்பாதிக்க முடியாது.*
*தேவனே நான் உம்மை நம்புகிறேன் நீர் என்மேல் கிருபையாய், இரக்கமாய் இருந்து என் பாவங்களுக்காய் பரிகரித்து என்மேல் வரும் தண்டனையை ஏற்றுக்கொள்ளும்.*

***லூக்கா 18:9-14,***
*பரிசேயன் மற்றும் ஆயக்காரனின் ஜெபம்.*

*இஸ்ரவேலில் உள்ள பொய்யான மதம் மனிதனின் கிரியைகளை நம்பி உள்ளது, யூதர்களின் பாரம்பரியத்தை நம்பியுள்ளது, தேவன் அவர்களுக்கு கொடுத்த பழைய உடன்படிக்கைகளை நம்பி உள்ளது.*

*உலகம் காயீனின் வழியை பின்பற்றுகிறது.*
*இஸ்ரவேலில் உள்ள நிறைய பேர் காயீனின் வழியை பின்பற்றி ஆபேலின் வழியை பின்பற்றுகிற தீர்க்கதரிசிகளை கொலை செய்தனர்.*

*யூத மதம் என்பது காயீனின் மதத்தை அல்லது வழியை பின்பற்ற கூடியது அது ஆபேலின் வழியை பின்பற்றுகிறவர்களை கொலை செய்கிறது.*

***2 நாளகமம் 36: 14-16,*** *14. ஆசாரியரில் பிரதானமானவர்கள் யாவரும் ஜனங்களும் கூடிப் புறஜாதிகளுடைய சகல அருவருப்புகளின்படியும் மிகவும் துரோகம்பண்ணி, கர்த்தர் எருசலேமிலே பரிசுத்தம்பண்ணின அவருடைய ஆலயத்தை தீட்டுப்படுத்தினார்கள்.15. அவர்களுடைய பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் தமது ஜனத்தையும் தமது வாசஸ்தலத்தையும் காப்பதற்கான இரக்கமுள்ளவராயிருந்தபடியால், அவர்களிடத்துக்குத் தம்முடைய ஸ்தானாபதிகளை ஏற்கனவே அனுப்பினார். 16. ஆனாலும் அவர்கள் தேவனுடைய ஸ்தானாபதிகளைப் பரியாசம்பண்ணி, அவருடைய வார்த்தைகளை அசட்டைசெய்து, அவருடைய தீர்க்கதரிசிகளை நிந்தித்தபடியால், கர்த்தருடைய உக்கிரம் அவருடைய ஜனத்தின்மேல் மூண்டது; சகாயமில்லாமல் போயிற்று.*

*பழைய ஏற்பாட்டில் உள்ள தீர்க்கதரிசிகளின் வாழ்க்கையை நாம் பார்த்தால் அவர்கள் எல்லோரும்*
*ஏளனம் செய்யப்பட்டனர்,*
*பரிகாசம் செய்யப்பட்டனர்,*
*கொல்லப்பட்டனர் மற்றும்*
*இரண்டு துண்டாக வெட்டி வீசப்பட்டனர்.*

*அதே சம்பவங்கள் தான் இன்று கிறிஸ்தவத்திலும் நடக்கிறது. கிறிஸ்தவ வரலாற்றில் உண்மையான பல கிறிஸ்தவர்கள், கள்ள கிறிஸ்தவர்களால் படுகொலை செய்யப்பட்டு உள்ளனர்.*

**ரோமர் 9:6**, தேவவசனம் அவமாய்ப் போயிற்றென்று சொல்லக்கூடாது; ஏனென்றால், இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் இஸ்ரவேலரல்லவே.

வெளியரங்கமாக மட்டும் யூதர்களாக காண்பித்து கொள்பவர்கள் உண்டு, உள்ளத்தில் யூதனானவர்கள் சிலரே. ஆபிரகாமை போல தேவன் மேல் இரட்சிப்பிற்காக நம்பிக்கை வைத்தவர்களுக்கு அது நீதியாக என்னப்படும்.

சில கிறிஸ்தவர்கள் மட்டுமே உண்மையான கிறிஸ்தவர்களாக இருப்பார்கள்.

இயேசு பூமியிலிருந்த காலத்தில், உண்மையான மதத்தை பின்பற்றுபவர்களாக இருந்த சில யூதர்களை நாம் பெயரிடுவோம். சகேயு, எலிசபெத், யோசேப்பு, மரியாள், சிமியோன், அன்னாள், இன்னும் சில.

தேசம் நம்முடைய ஆண்டவரின் காலத்தில் வெளியரங்கமாக மட்டும் தன்னை நல்லவர் போல காண்பித்துக்கொள்ளும் ஒரு போலித்தனமாக இருந்தது. கீழே பரிசேயன் கூறுவதை வைத்து யூத முறை எப்படி இருந்தது என காண முடியும்,

*"நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன், நான் உம்மால் ஏற்று கொள்ள பட தகுதி உள்ளவன்."*

வேதம் தெளிவாக சொல்லுகிறது யூதர்கள் தங்களில் தாங்களே நம்பிக்கை உள்ளவர்கள்.
அவர்கள் வாழ்நாள் முழுவதும் இதையே பின்பற்றினர்.

*அவர்கள் நம்முடைய ஆண்டவர் வாழ்ந்த காலத்திலும் இதையே தான் செய்தார்கள்.*

*அப்போஸ்தலர்கள் காலத்திலும் இதையே தான் செய்தார்கள். அவர்கள் தேவனுடைய வார்த்தைகளுக்கு பதிலாக போதக கொள்கைகளை நடைமுறைகளை கொண்டு வந்தார்கள்.*

*நீங்கள் தேவனோடு நல்ல உறவை மேற்கொள்ள வேண்டுமானால் நாங்கள் நம்புகின்ற மற்றும் பாதிக்கிற படி மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட கட்டளைகள் விழாக்கள் போன்றவற்றை பின்பற்ற வேண்டும், மற்றும் வேதபாரகர் பரிசேயர்கள் சொல்வதையும் பின்பற்ற வேண்டும் என்று உபதேசித்தனர். இந்த மக்களும் பாசாங்குத்தனமான பொய் மதத்தைப் பற்றிக்கொண்டார்கள்.*

*பொய்யான மத தலைவர்களை பார்த்து இயேசு தைரியமாக பின்வருமாறு சொல்லுகிறார்.*
***மத்தேயு 21:31-32**, 31. இவ்விருவரில் எவன் தன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன் என்று கேட்டார்; அதற்கு அவர்கள்: மூத்தவன் தான் என்றார்கள். அப்பொழுது, இயேசு அவர்களை நோக்கி: ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.32. ஏனென்றால், யோவான் நீதிமார்க்கமாய் உங்களிடத்தில் வந்திருந்தும், நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை; ஆயக்காரரும் வேசிகளுமோ அவனை விசுவாசித்தார்கள்; அதை நீங்கள் கண்டும், அவனை விசுவாசிக்கும்படியாகப் பின்பாகிலும் மனஸ்தாபப் படவில்லை என்றார்.*

*பெந்தேகோஸ்தே வந்தது! சபையும் பிறந்தது!!*

*சபையானது கிறிஸ்தவர்களாக மாறின யூதர்களையும் உள்ளடக்கியது. அது ஒரு சில யூதர்களுக்கு பிரச்சனையாக அமைந்தது. அந்த பரந்த, சட்டபூர்வமான, பெருமை வாய்ந்த யூதர்களிடமிருந்து, யூத மதவாதிகள் அதாவது ஜுடேசர்ஸ் (Judaziers) என அழைக்கப்பட்ட ஒரு குழு எழுந்தது, அவர்களின் நோக்கம் யூத மதவாதிகளை எழுப்புவதாகும்.*

*அந்த யூத மதவாதிகள் இயேசுவை நம்புவதாகவும் அவரே கிறிஸ்து என்று விசுவாசிப்பதாகவும் கூறினர். அவரின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை நம்புகிறோம். ஆனால் இரட்சிக்கப்பட அவரை விசுவாசித்தால் மட்டும் போதும் என்பதை நாங்கள் ஒப்புக்கொள்ள மாட்டோம். நீங்கள் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும், நீங்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தை பின்பற்ற வேண்டும்.''*

*இயேசு கிறிஸ்து பரிகாரியாகி செய்த காரியம் போதுமானதாக இல்லை என்கின்றனர். இரட்சிக்கப்பட வேண்டுமானால் நாம் கையின் கிரியைகளை செய்து இருக்க வேண்டும் என அவர்கள் நம்பினர்.*

*இவை அனைத்தும் கிறிஸ்தவத்தின் தவறான வடிவங்களே! அவர்கள் மறுத்துவிட்டனர்,*

- *பரிகாரத்தை அவர்கள் நிராகரித்தனர்,*
- *பலியாக இயேசு மறுத்ததை நிராகரித்தனர்,*
- *உண்மையான மனம் மாறுதலுக்கு விருத்தசேதனம் வேண்டும் என்றனர்*
- *மோசேயின் கட்டளைகளை மற்றும்*
- *பாரம்பரியங்களை பின்பற்றவேண்டும் என்றனர்.*

*அவர்கள் இதை குறித்து விடாப்பிடியாக அப்போஸ்தலனாகிய பவுலை ஊழியத்தில் நுழைந்து, அவர்*

*உருவாக்கிய சபைகளுக்குள் நுழைந்து, இந்த செய்தியை விளம்பரப்படுத்த ஆரம்பித்தார்கள்.*

*இது உண்மையா?*
*புற ஜாதிகள் மோசேயின் கட்டளைகள், விருத்தசேதனம் மற்றும் பாரம்பரியங்களை பின்பற்ற வேண்டுமா?*
*அவர்கள் விருத்தசேதனம் பெற வேண்டுமா?*

*பவுல் காலத்தியருக்கு எழுதுகிறார் “தேவையே இல்லை“ என்று.*

***ரோமர் 4:1-4**, 1. அப்படியானால், நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் மாம்சத்தின்படி என்னத்தைக் கண்டடைந்தான் என்று சொல்லுவோம்?2. ஆபிரகாம் கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட்டானாகில் மேன்மைபாராட்ட அவனுக்கு ஏதுவுண்டு; ஆகிலும் தேவனுக்கு முன்பாக மேன்மைபாராட்ட ஏதுவில்லை.3. வேதவாக்கியம் என்ன சொல்லுகிறது? ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லுகிறது.4. கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபை யென்றெண்ணப்படாமல், கடனென்றெண்ணப்படும்.*

*ஆபிரகாம் தேவனை விசுவாசித்தன் அவன் விருத்தசேதனம் பெரும் முன் இது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. விருத்தசேதனத்திற்கு அதில் பங்கு இல்லை. மோசேயின் நியாயபிராமணங்கள் எல்லாம் அபிரகாமிற்கு பிறகுதான் வந்தது.*

*பவுல் இதை கிறிஸ்துவோடு கூடுதலாக சேர்க்கப்பட்டதாக காண்கிறார்!*
*இயேசு மரித்து உயிர்த்தார் அது தான் சுவிசேஷம்.*

*யூத மதவாதிகள் அது போதாது என்கின்றனர். நீங்கள் விருத்தசேதனம் பண்ணி ஆகவேண்டும். நீங்கள் சட்டத்தை கடைபிடிக்க வேண்டும்.*

*இது பொய் சுவிசேஷம் என்று பவுல் கண்டார்.*
*பவுல் இப்போது போராடுகிறார்.*
*பவுல் உண்மையான சுவிசேஷத்திற்காக போராடுகிறார்.*
*பவுல் கிறிஸ்துவின் மூலமாக மட்டுமே விசுவாசத்தினால் மட்டுமே பெறப்பட்ட கிருபையின் சுவிசேஷத்திற்காக போராடுகிறார்.*

*ரோமர் 4ல் நாம் வாசிக்கும் போது பவுல் சொல்லுகிறார்.*

*வரலாற்றில் இது வரை எந்த மனிதனும் இரட்சிக்கப்படவில்லை,*
*தேவனோடு ஒப்புரவு ஆகவில்லை,*
*மன்னிக்கப்படவில்லை,*
*நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பிக்கவில்லை ஏனென்றால் மனிதன் அதற்காக இதுவரை ஒன்றுமே செய்யவில்லை.*
*இதுவரை யாரும் கிரியைகள் மூலம் இரட்சிக்கப்படவில்லை.*
*அது தான் காயீனின் வழி.*
*கிரியைகள் மூலம் யாரும் இரட்சிக்கப்படவில்லை.*

*அதனால் தான் பவுல் தன் கடிதங்களில் விசுவாசத்தை குறித்து அதிகமாக பேசுகிறார், அதை நாம் அதிகமாக கலாத்தியரில் காண முடியும்.*